நிகழும் 2023 வருடம் செப்டம்பர் 29 தேதி வெள்ளி கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர் மன்ற கூட்ட அறங்கத்தில் அவசர கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்கண்ட பொருள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**முன்னிலை: திருமதி.சுமதி சிவக்குமார்**

**நாள் : 27.09.2023** **நகர்மன்ற**

**தலைவர்,**

ஜெயங்கொண்டம் நகராட்சி.

## <u>பொருள்கள்</u>

| | | |
|---|---|---|
| **பொருள் எண்.1** | **MCR NO. 128** | ஜெயங்கொண்டம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பணி மேற்கொள்ள நிரந்தர தூய்மை பணியாளர்கள் போதிய அளவு இல்லாமையால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.35712/2013/பி3 நாள்.25.09.2013 தேதிய கடிதத்தில் இந்நகராட்சியில் 134 ஒப்பந்த தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. 2018 – 19 ஆம் நிதியாண்டு முதல் 134 ஒப்பந்த தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ள துரை அன் கோ நிறுவனத்திடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்கள் நிர்ணயத்த தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கவும் மற்றும் 2019 ஏப்ரல் முதல் டிசம்பர் 2022 வரை ஊதிய நிலுவை தொகை வழங்க கோரி தொழிலாளலர் துணை ஆணையம் திருச்சிராப்பள்ளியில் 23.09.2022 அன்று ஒப்பந்த தூய்மை பணியாளர்களால் தண்டபாணி, சங்க தலைவர், (ஏஐடியுசி) அரியலூர் (திருவள்ளுவர்) மாவட்ட முனிசிபல் மற்றும் பஞ்சாயத்து தொழிலாளர் சங்கம், என்னும் அமைப்பின் மூலம் வழக்கு தொடரபப்பட்டு நகராட்சி ஆணையர் நேரில் ஆஜராகி போது தொழிலாளலர் துணை ஆணையர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்கள் நிர்யணம் செய்த தினக்கூலி ஊதிய விகிதத்தில் ஊதிய வழங்க அறிவுரை வழங்கப்பட்டது. இதன் பிறகு நிலுவை தொகை வழங்க கேட்டு ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் நகராட்சியை எதிர்த்து சாலை மறியல் போன்ற போராட்டத்தில் ஈடுப்பட்டனர், பின்னர் நகராட்சி ஆணையர், நகர்மன்ற தலைவர், துப்புரவு ஆய்வாளர், மேலாளர் ஆகியோர்கள் ஒப்பந்த தூய்மை பணியாளர்களை அழைத்து நகராட்சி விதி முறைகளை பின்பற்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கூறி சமரசம் செய்யப்பட்டு, அதன் பின்னர் இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 10 நாள். 30.01.2023 ன்படி துரை அன் கோ நிறுவனத்திடம் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணிகளை |

| | | |
|---|---|---|
| | | மேற்கொண்டு வந்த 134 நபர்களுக்கு 2023 ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2022 – 23 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்கள் நிர்யணம் செய்த தினக்கூலி ஊதிய விகிதத்தில் வழங்கப்பட்டு வந்தது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் கடித ந.க.எண்.35295/2022/EA2-SWM-17 நாள்.10.01.2023 தேதிய கடிதத்தில் குப்பைகளை வெளிக்கொணர்வு மூலம் குப்பைகளின் அளவு குறித்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோர ஆணை பிறப்பபிக்கப்பட்டது. புதிய வெளிக்கொணர்வு தூய்மை பணிக்கு தற்பொழுது நகராட்சியில் உள்ள வாகனங்கள் மூலம் 73 தூய்மை பணியாளர்கள், 11 ஓட்டுநர்கள் மற்றும் 4 பணி மேற்பார்வையாளர்கள் ஆக கூடுதல் மொத்தம் 88 பணியாளர்கள் மூலம் தினசரி சேகரமாகும் குப்பைகளை அகற்ற தினசரி 11.96 மெட்ரிக் டன்னிற்கு அனுமதி வழங்கப்பட்டு இதன் அடிப்படையில் டெண்டர் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை அறிந்த துரை அன் கோ நிறுவனத்ததை சார்ந்த 127 ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் தண்டபாணி, சங்க தலைவர், (ஏஐடியுசி) அரியலூர் (திருவள்ளுவர்) மாவட்ட முனிசிபல் மற்றும் பஞ்சாயத்து தொழிலாளர் சங்கம், அமைப்பு மூலம் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் WP.No.12775 of 2023 And WMP.No.12575 of 2023 Date 25.04.2023 (நகராட்சி அலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.08.05.2023) நாளின் படி வழக்கு தொடரப்பட்டு இடைக்கால ஆணை பெறப்பட்டது. இந்த இடைக்கால ஆணையில் ஜெயங்கொண்டம் நகராட்சி ஏற்கனவே பணிப்புரிந்து வந்த 127 ஒப்பந்த தூய்மை பணியாளர்களை பணியிலிருந்து நீக்காமல் பணி தொடர அனுமதிக்க வேண்டும் எனவும் அவர்களது எந்த வித இடையூறும் ஏற்படுத்த கூடாது என்றும் நகராட்சி மூலம் தொடரப்படும் புதிய வெளிக்கொணர்வு ஒப்பந்த டெண்டர் பணிகளை தொடரலாம் என்றும் இடைக்கால ஆணை வழங்கப்பட்டது. ஏற்கனவே ஒப்பந்த தூய்மை பணி செய்து வந்த துரை அன் கோ நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.05.2023 தேதியுடன் முடிவு பெறப்பட்டது.<br>ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ந.க.எண். 115/2023/எச்1 நாள். 30.05.2023 உத்தரவில், 01.06.2023 முதல் M/s மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை தூய்மை பணி நிறுவனம், காரைக்குடி என்னும் நிறுவனம் மூலம் பொது சுகாதார பணிகளுக்கான ஒப்பந்தத்தை அனுமதித்து உத்தரவிடப்பட்டு, இவ்வுத்தரவில் சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் W.P.No.12775 of 2023 மற்றும் WMP. No. 12575 of 2023 ன் படி பொது சுகாதார பணியில் ஏற்கனவே ஈடுப்பட்டு வந்த 127 ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு எவ்வித இடையூறும் கொடுக்காமல் பணி செய்ய அனுமதிக்க பட வேண்டும் என ஆணையிடப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் புதிய ஒப்பந்தப்படி இந்நகராட்சிக்கு 73 தூய்மை பணியாளர்கள், 11 ஓட்டுநர்கள் மற்றும் 4 பணி மேற்பார்வையாளர்கள் ஆக கூடுதல் மொத்தம் 88 பணியாளர்கள் மட்டும் ஈர்க்கப்பட்டது. மீதமுள்ள 39 பணியாளர்களும் இவ்வலுவலக ந.க.எண். 115/2023/எச்1 நாள். 30.05.2023 ஆணைப்படி நகராட்சி பணிகளை மேற்கொண்டு வந்தமைக்கான 01.06.2023 முதல் 31.08.2023 வரை ரூ. 13,70,616/– ஊதியம் வழங்கப்பட்டதையும் 09.2023 மாத ஊதியத்தையும் வழங்க M/s மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை தூய்மை பணி நிறுவனம், காரைக்குடி என்னும் நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.<br>சென்னை உயர்நீதி மன்றத்தில் WP.No.12775 of 2023 And WMP.No.12575 of 2023 என்ற வழக்கானது 13.07.2023 அன்று மேற்கண்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என வழக்கு நகராட்சி வழக்கறிஞரால் தகவல் அறியப்பட்டது. நாளது வரை மேற்கண்ட வழக்கின் தீர்ப்பு விபரம் நகராட்சி அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை. மேற்கண்ட வழக்கின் |

| | | |
|---|---|---|
| | | தன்மையை அறிய நகராட்சி வழக்கறிஞரிடம் தொலைப்பேசியில் கேட்ட போது நகராட்சி நிர்வாகத்திற்கு எந்த வித சம்மந்தமும் இல்லை எனவும், ஒப்பந்ததாரரே முடிவு எடுக்க வேண்டும் எனவும் கூறி வழக்கினை தள்ளுப்படி செய்யப்பட்டது என கூறியுள்ளார்.<br>எனவே, மேற்கண்ட வழக்கின் இடைக்கால ஆணைப்படி அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக 39 ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு M/s மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை தூய்மை பணி நிறுவனம், காரைக்குடி என்ற நிறுவனம் மூலம் 01.06.2023 முதல் 31.08.2023 வரை வழங்கி ரூ. 13,70,616/– ம் மற்றும் 09/2023 வரை உள்ள காலத்திற்கான ஒப்பந்த தொகையை வழங்க கேட்டுயுள்ளது தொடர்பாக மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் W.P.No.12775 of 2023 மற்றும் WMP. No. 12575 of 2023 இடைக்கால ஆணையின் படியும் மற்றும் பொது சுகாதார நலன் கருதியும் M/s மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை தூய்மை பணி நிறுவனம், காரைக்குடி என்ற நிறுவனம் மூலம் 01.06.2023 முதல் 30.09.2023 வரை கூடுதலாக 39 ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் பணிப்புரிந்து வருகின்றனர் இப்பொருள் தொடர்பாக அலுவலக ரீதியான பணிகள் தொடர மன்றத்தின் இறுதி ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**<u>ந.க.எண். 2257 / 2023 / எச்1</u>** |

**ஆணையர் ,**
**ஜெயங்கொண்டம் நகராட்சி.**